உ
சிவமயம்

நாரந்தனை வடக்கு, பண்டாரக்குளம்
ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள்



நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை நாகராசா

அவர்களின்

# நினைவு மலர்

01.12.2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப்
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவருமான

அமரர்

# திரு. சின்னத்துரை நாகராசா

அவர்களின்

# நினைவு மலர்

**01.12.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்




எமது அன்புத் தெய்வத்தின் திருப்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
அன்போடும், பரிவோடும், பாசத்தோடும் வளர்த்து
நல்வழிப்படுத்தி எம்மை ஆளாக்கிய அன்புத்
தந்தையே அன்புத் தெய்வமே! குலவிளக்கே
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல எமது
குல தெய்வங்களை வணங்கி
எமது குடும்பத் தலைவருக்கு காணிக்கையாக
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

–குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



தோற்றம்
1937 . 08 . 04

மறைவு
2012 . 11 . 01

# அமரர் சின்னத்துரை நாகராசா

அவர்களின்

## திதிநிர்ணயம்

நிகழும் நந்தன வருஷ ஐப்பசி மாதமதில்
பத்தொன்பதாம் நாள் அபரபக்க
திருதியை திதியில் நாகராசா இறைதாள்
சென்றடைந்த நன் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணக வாழ்வு
23.07.1981

விண்ணக வாழ்வு
26.03.2009

அமரர்

# நாகராசா பிரியதர்சினி

அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.சின்னத்துரை நாகராசா

நாராந்தனையைச் சேர்ந்த திரு.சின்னத்துரை திருமதி நாகம்மா தம்பதியினரின் புதல்வனாக திரு. நாகராசா அவர்கள் 04.08.1937 அன்று பிறந்தார். அவரோடு கூடவே தியாகராசா, சிவராசா ஆகிய சகோதரர்களும் தர்மவதி எனும் சகோதரியும் பிறந்தனர். அன்னாருக்கு உரிய வயது வரவே பெற்றோர்கள் அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு.கனகசபை, திருமதி ரூபவதி அம்மா தம்பதியரின் புதல்வி கமலாதேவியை மணம் முடித்து வைத்தனர். கமலாதேவி அவரோடு கூடவே தவமணிதேவி, சரஸ்வதிதேவி, மகேஸ்வரி ஆகிய சகோதரிகளும் முருகேசபிள்ளை எனும் சகோதரனும் பிறந்தனர்.

நாகராசா கமலாதேவி தம்பதியினருக்கு இல்லறம் சிறக்க குகவதனி, ரகுகுமார், யசிந்தா, வசந்தா, மயூரன், பிரியதர்சினி, லக்ஸ்மன், கிருஸ்ணாளினி ஆகிய என்மர் பிள்ளைகளாகப் பிறந்தனர்.

மூத்த மகள் குகவதனி கிருபராஜாவை மணந்து ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார். அவர்களுக்கு மூன்று மகள்கள் உள்ளனர். அவர்கள் முறையே ஜனனி, ஜாதவி, ஜஸ்வினி ஆகியோராவர். திரு. ரகுகுமார் திருமதி பிரம்மினாவை மணந்து லண்டனில் இனிதே இல்லறம் நடத்தி வருகிறார். யசிந்தா பத்மநாதனை மணந்து பிரான்சில் வாழ்ந்து வருகிறார். அவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள். அவர்கள் முறையே சபரினா, சகிரா, அபிசேக் ஆகியோராவர். வசந்தா ஜெயக்குமாரை மணந்து பிரான்சில் வாழ்ந்து வருகிறார். அவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள். அவர்கள் முறையே மிதுஷா, சதுஷா, திலோஜன் ஆகியோராவர். மயூரன் சுபாசினியை மணந்து பிரான்ஸில் வாழ்ந்து வருகின்றார். அடுத்து காலஞ்சென்ற பிரியதர்சினி ஆவார். அடுத்தவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸ்மன் பிறந்தார். அவர் இந்துஜாவை மணந்து இனிதே இலங்கையில் வாழ்ந்து வருகிறார். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் முறையே விஷ்ணு, கோகுலன், மதுரா ஆகியோராவர். அடுத்து கடைசி மகளான கிருஷ்ணாணி பிரான்சில் வாழ்ந்து வருகிறார்.

நாரந்தனையில் விவசாய குடும்பத்தில் பிறந்து வேளாண்மையைத் தொழிலாகச் செய்த தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றி குழந்தைகளைச் சிறந்த முறையில் கல்வி பயில்வித்து, மணமுடித்து வைத்து தன் இல்லறக் கடனை இனிதே முடித்தார் நாகராசா.

தன்னுடைய இறுதிக்காலத்தை தனது சொந்த ஊரான நாரந்தனையில் வாழ்ந்து திடீரென யாருக்கும் எந்தவித இட்டல் இடைஞ்சலுமின்றி 01-11-2012 ல் சிவபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

அன்பால் எனை ஆட்கொண்டு
ஆசையாய் மனமுவந்து ஏற்று
கருத்தொருமித்துக் கள்ளமில்லாக் காதல் கொண்டு
கடிமணம்புரிந்த காலங்களையே
எண்ணி நான் பார்க்கையிலே
ஏங்கித் தவிக்கின்றேன்
இன்பமாக இல்லற வாழ்வு அளித்து
ஏற்றமாய் எட்டு கண்மணிகள் தந்து
நல்லன சில கண்டு நாம் மகிழ்ந்த போதும்
கண்ணான உன்னைக் காத்திடு என்று
அம்மன் சிவன் ஆலயங்கள் சென்று
முருகா, முருகாவென அனுட்டானம் செய்து
தினமும் தொழுதேனே
விரதங்கள் நான் நோற்றும்
உனை விட்டுப் பிரிந்தேனே
அன்பான உன் உருவை
எக்காலம் காண்பேன் யான்
விரும்பியா தந்தீர்கள்? விதி தந்ததுவா?

## சகோதரி தர்மவதி புலம்பல்

எங்கள் தம்பி எங்களுக்கு தெய்வப்பிறவி....
அவருடைய இறப்பை எங்களால் மறக்க முடியாது.
நாங்கள் ஆண்டாண்டு காலம் அழுது புலம்பினாலும் அவர்
இறப்பை மறக்க முடியாது எங்கள் குடும்பத்தில் ஒரு
ஒளி விளக்காகவே இருந்தார். என்னுடைய பிள்ளைகளுக்கு
நல்ல வழிகாட்டியாக இருந்தார். இனி எங்களுக்கு
யார் வழிகாட்டியாக இருக்கப் போகிறார்....
எங்களுக்கும் சரி பிறருக்கும் சரி
ஒரு தெய்வமாக வழிகாட்டியாக இருந்தார்.
அவரின் திடீர் இறப்பு எங்களுக்கு வேதனையைத் தந்தது....
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் வதனி புலம்பல்

எனது ஆசை அப்பாவே...
உங்கள் இழப்பை
தொலைவில் இருக்கும் நாங்கள்
தொலை பேசியில் கேட்ட போது
மனம் இடிந்து போயிற்று.
ஏன் சென்றீர்கள் எமைப் பிரிந்தே....
எரிகிறது எம் நெஞ்சம் அப்பா...
உங்களுடன் வாழ்ந்த காலங்கள்
அனைத்தும் வசந்த காலங்களே...
உங்கள் உடல்தான் அப்பா...
எங்களை விட்டுப் பிரிந்து விட்டது.
ஆனால் உங்களுடன் வாழ்ந்த
நினைவுகள் அழியாது அது என் இதயத்தில்
எப்பவும் குடியிருக்கும் அப்பா....
நீங்கள் உங்கள் ஆசைமகள் ஆச்சியை (பிரியதர்சினி)
தேடி போய் விட்டீர்கள்...
உங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்....

மூத்தமகள்
குகவதனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகன் ரகு புலம்பல்

இன்பத்தின் முடிவுகளும் நீங்களே அப்பா
துன்பத்தின் தொடக்கமும் நீங்களே அப்பா
உள்ளத்தில் என்றும் நீங்களே அப்பா
உயிராய் என்னுள் என்றும் வாழ்வதும்
நீங்களே அப்பா .... இன்று என்னை
தவிக்க விட்டு சென்றது ஏனோ
உங்கள் திருமுகம் காண ஒரு கணம்
விழித்திருக்கின்றேன் எம்மிடம்
வாருங்கள் அப்பா....

அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

மூத்தமகன்
ரகுகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகள் யசிந்தா புலம்பல்

எனது ஆசை அப்பாவின் திடீர்
பிரிவைகேட்டதும் துடி துடித்தேன்.
எனது அப்பாவின் இனிய குரலை
எப்பதான் கேட்கப் போகின்றோம்.
கம்பளி போர்த்தி தூங்கினாலும் அப்பா
உங்கள் கனவே என்னை வந்து எழுப்பும்
கருகை தாளிக்க வைத்தால் உங்கள் பெயர்
சொல்லி வெடிக்கும் அப்பா....
உங்கள் இறப்பால் நான் வாடுகிறேன்.
அப்பா பிரான்ஸ் நாட்டுக்கு வந்து
பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை பார்த்து
மகிழ்ந்து கொள்வதற்கு ஆசைப்பட்டார்.
அவரின் ஆசை நிறைவேறாதது எனக்கு
ஆழ்ந்த கவலையாக இருக்கிறது.
எனது அப்பா எங்களை அன்பாகவும் பண்பாகவும்
வழிநடத்தி சென்றது....
அவரின் துயரத்தால் நான் வாடுகின்றேன்.
அவரின் ஆத்மா சாந்திபடைய பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மகள்
யசிந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகள் வசந்தா புலம்பல்

அன்புள்ள அப்பாவே நீங்கள் எங்களை விட்டு
உயிர் பிரிந்தாலும் என் ஆயுள் வரை
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு பிரியாது
ஸ்கைப்பில் உங்களைப் பார்த்தோம்
ஆனால் நேரில் எங்களுக்கு
பார்க்க கொடுத்து வைக்கவில்லை.
ஸ்கைப்பில் எனது பிள்ளைகள் பார்த்து
தாத்தா என்று கூப்பிடும் போது நீங்கள்
உறக்கத்தில் இருக்கின்றீர்கள்.
உங்களின் உறக்கம் நல் உறக்கமாக எனது
பிள்ளைகளின் மழலைச் சொல் கேட்டு
நல்உறக்கமடைய இறைவனை வேண்டுகிறேன்.
பலமணி நேரமாகியும்
பல வருடங்களாகியும்
உங்கள் அழைப்பிற்காக மட்டுமல்ல
உங்கள் அன்பிற்காகவும்
உங்கள் வரவிற்காகவும் - அந்நிய நாட்டில்
நாம் காத்திருந்தோம்....
உங்கள் நினைவலைகள் எங்களைக் கொல்லுகின்றது.
ஒருதரம் நினைத்துப்பார்த்தால் கண்ணீர் மல்கின்றேன்.
என் உயிர் அப்பாவே உங்கள் உயிர் பிரிந்த நாளில்
நான் செய்தி கேட்டு துடித்தேன் எங்களின்
உயிர் உள்ள போது உங்களை மறவோம்.
எங்களைத் தவிக்க விட்டுச் சென்றீர்களே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மகள்
வசந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மகன் மயூரன் புலம்பல்

அப்பா என்ற சொல்லிற்கு
முற்று வைத்து விட்டுச்
சென்றீர்களே....
உங்களுக்குப் பிரியமான பிரிய தர்சினியை
நினைவு கூரும் மாதத்தில்
உங்களையும் சேர்த்து நினைவு கூருவதற்காகவா...
கார்த்திகை மாதத்தில்
உங்களின் சுவாசத்தை என்னிடம்
விட்டுச் சென்றீர்களோ...
உங்களின் சாவு எங்களை
ஒரு கணம் திகைப்புக்குள் உள்ளாக்கியது
ஆனாலும் உங்களின் தன்னம்பிக்கை,
பொறுமை, கம்பீரம், சிரிப்பு எல்லாமே
எங்களை முன்னோக்கி வழி நடத்துகின்றது
இதயத்தில் கலக்கம் இருந்தாலும்
என் கண்களில் கலக்கம் இல்லாமல் இருப்பதற்கு
உங்களின் குருதி என்னிடம் ஊறுகின்றதே அல்லவா...
உங்களின் சாம்பல் எங்களின் மண்ணுக்காக
வித்தானவர்களை ஒளி விளக்கேற்றி நினைவு கூரும்
நன்நாளில் கலந்து ஆகுதியாகட்டும்...

சின்ன மகன்

மயூரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகன் லக்ஸ்மனின் மனக்கவலை

பிறந்த நாள் முதலாக என்னிடம்
அன்பு கொண்ட அப்பாவே
வளர்த்து ஆளாக்கிய எனது
அருமைத் தந்தையே
இறுதி மூச்சு வரை என்னை
பிரிய மனமில்லாது பிரிந்த அப்பாவே

அப்பா என்று நான் அழைக்க
அன்பு மழை பொழிந்தென்னை
எப்பொழுதும் அணைத்தவரே
பாசத்தினை பண்புடன்
ஊட்டி அன்பாய் வளர்த்தீரே
உம் ஆதரவான வார்த்தைகள்
என் வாழ்நாள் முழுவதும் கூட வரும்
பண்பின் புகலிடமாய்
பார் தனில் வாழ்ந்தவரே
எனக்கொன்றும் சொல்லாமல்
எங்கு சென்றீர்?

சோகம் மிகுதியாச்சு கண்களில்
கண்ணீர் ஆச்சு
கதறி அழுகின்றேன் - என்
அன்பின் திருவுருவே

வைத்தியசாலையில் போகின்றேன் என்று
வையகம் விட்டு சென்ற அப்பாவே
ஆறுதல் தானின்றி ஏங்குகிறேன்
அன்பின் அப்பாவே உன் முகம் காணாமல்
என் கண் கலங்க வைத்து - உமை
காலனவன் கவர்ந்தானோ
என்றும் உம் ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றேன்

இளைய மகன்
லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகள் கிருஸ்ணாவின் புலம்பல்

ஒரு முறை பிறந்தவர்க்கு
ஒரு முறைதான் மரணமய்யா...
ஆனால்....
உங்களை நேசித்த எனக்கு உங்களுடைய இறப்பை...
நினைக்கும் ஒவ்வொரு நொடியும் மரணம்...
அப்பா........

அப்பா உங்களுடைய இறப்பையும்
எனது ஆசை அக்கா இழப்பையும்
மறக்க நினைக்கின்றேன்.......
ஆனால் ஒவ்வொரு
நொடியும் தோற்கிறேன்....
எனது தந்தையாக...
நினைத்த உங்களையும்
எனது சகோதரியாக
நினைத்த ஆசை அக்காவையும்
என்னால் மறக்க முடியாமல்
அந்நிய தேசத்தில் பரிதவிக்கின்றேன்....

பூக்களுக்கு பேச
தெரியாது...
தெரிந்து இருந்தால்
சொல்லி விடும்
உங்களைப் போல் ஒரு
அப்பா எனக்கு
கிடைத்திருந்தால்...
தினம் தினம் வாடாமல்
இருப்பேன் என்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்காலமும்
எதிர்காலமும்
ஊட்டி வளர்த்த
இந்த அன்பெனும் அப்பாவின்
வரம் போதுமே
இறந்தாலுமே
இறக்காமலே
இந்த ஞாபகம் என்றும்
வாழுமே.....

மனதினுள் நீங்களும்
உயிருக்குள் உங்கள்
நினைவும்
உங்கள் இறப்புடன்
எங்கள் உணர்வும்
இருக்கும் போது......
உங்களுடைய இறப்பை மறப்பது
சாத்தியமா.......

ஆயிரம் கோடி
நட்சத்திரம்
விண்ணில் இருந்தாலும்
இரவுக்கு அழகு
நிலவுதான்....
ஆயிரம் உறவுகள்
மண்ணில் இருந்தாலும்
வாழ்க்கைக்கு அழகு
நல்ல குடும்பத் தலைவன்...

அப்படியான எனது தந்தையின்
இறப்பை எனது வாழ்க்கையில்
மறக்க முடியாது....
அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
நான் பிரார்த்திக்கின்றேன்....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இளைய மகள்
கிருஸ்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன் பத்மநாதன் புலம்பல்

மனிதனும் தெய்வமாகலாம் என்று
ஆன்றோர்கள் கூறுவார்கள்
அந்த வகையில் என்னுடைய மாமாவும்
ஒரு மெய்யான தெய்வப் பிறவியே.
எனது மாமா எங்கு சென்றாலும்
எங்கு நின்றாலும் அவர் ஒளிவிளக்காக மிளிர்ந்து
நின்ற அணையாத விளக்கு.
எனது மாமா எனக்கு சிறந்த வழிகாட்டி
எனது மாமா மருமகனே என்று மீசையை
முறுக்கி விட்டு ஒரு பார்வை அதில் ஒரு புன் சிரிப்பு
இவற்றை எல்லாம் நினைக்கும் போது
எனக்கு ஜீரணிக்க முடியாத பேரிழப்பு
நான் எண்ணியிருந்த எண்ணத்திற்கும்
எனது மாமா எனக்கு தந்த இழப்பையும்
நினைத்து நினைத்து துடிக்கின்றேன்.
இப்படி ஆகிவிட்டதே எனது மாமாவிற்கு
விதி விளையாடி விட்டது
அனைத்தும் இறைவன் நியதி என எண்ணி
மாமாவின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மருமகன்

பத்மநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் தவிப்புகள்

தாத்தா எமது அருமைத் தாத்தாவே
வாய் நிறைய எமைப் பார்த்து
சிரித்திடும் புன்னகை முகம் எங்கே

அன்புடன் எம்மை கோவிலுக்கும்
பாடசாலைக்கும் ஆசையுடன்
அழைத்துச் செல்லும் தாத்தா எங்கே

பாவை, துவக்கு, விமானம், கார்
என்று பல பொம்மைகள் வாங்கித்
தருகின்ற அன்பான தாத்தா எங்கே?

எம்மைப் பார்த்து அவன் என்னைப்
போல இருக்கிறான் என்று
உறவுகளிடம் இரசித்திடும் தாத்தா எங்கே?

எம்முடன் மகிழ்ந்து இருந்து
எம்மைத் தவிக்க விட்டு சென்றதேனோ?
இனி யாருளர் எமக்கு உம்மைப் போல

எமது நெஞ்சத்தில் வாழும் தெய்வமே உமது
ஆத்ம சாந்திக்காய் எல்லாம் வல்ல தான்தோன்றி
அம்மனை வேண்டுகின்றோம்.

பேரப்பிள்ளைகள்
ஸ.விஸ்ணு, ஸ.கோகுலன்,
ஸ.மதுரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு பேரப்பிள்ளைகள் துயரம்

தாத்தா, தாத்தா என நாமும்
அழைக்கும் போதெல்லாம் - என்
அன்புச் செல்வங்களே என நீங்கள் சொல்லிடுவீர்
இனி தாத்தா என அழைத்தாலும்
நின் குரல் கேட்காதோ?
தொலை தூரம் நாமிருந்தாலும்
உங்கள் அன்பு குரல் கேட்டு ஆறுதலடைவோம்.
இங்குள்ள நாம் எல்லாம் - நின்
பிரிவு தாங்காது நித்தம் கலங்குகின்றோம்
எம்முடன் எப்போது வருவாயென
எண்ணிய எண்ண மெலாம்
ஏமாற்றமாய் போன தேனோ?
எம்மை ஏமாற்றிச் செல்ல
உங்களுக்கு மனம் வந்ததுவோ
தொலைபேசி மணிகேட்ட போதெல்லாம்
தாத்தா கதைக்காரோ என
எம் மனம் அங்கலாய்க்கிறது.
ஓடி வாருங்கள் தாத்தா
உங்கள் வரவை தினமும் எதிர்பார்க்கின்றோம்.

வெளிநாட்டு அன்புப் பேரர், பேர்த்தியர்
ஜனனி, ஜாதவி, ஜஸ்வினி,
சபரினா, சகிரா, அபிசேக்,
மிதுஷா, சதுஷா, திலோஜன்

## மருமக்கள் புலம்பல்

அன்பாக எம்மை ஆதரிக்கும் மாமாவே
அறியவில்லை எம்மைவிட்டு நீங்கள் செல்வீர்கள் என்று
இனியமுகத்துடன் இன்பமான பேச்சுடன்
எம் மனத்தைக் கவர்ந்தவரே
அமைதியான சுபாவம் கொண்ட மாமாவே
உங்களை இழந்து தவிக்கின்றோம்
தந்தையாக பழகிய மாமாவே
பரிதவிக்க விட்டு விட்டீர்களே.
மாமாவே இனி எப்போ உங்களை காண்போமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார்கள் புலம்பல்

நீவிர் காரற்ற முகில்போல்
கருணை உள்ளம் கொண்டவரே!
நின் வீட்டு வாசலிலே உம்மைக் காணவில்லை
எங்கே நீவிர் சென்றுவிட்டீர்
தனக்கென ஒரு வழியில்
எவருக்கும் துன்பமின்றி
வாழ்ந்து வந்தீர்கள்
நம்ப முடியவில்லை
நீர் சென்ற இடம் சிறக்க -- எம்
சிந்தையிலே பிரார்த்திப்போம்

## எங்கே?

நெற்றித் திருநீறு துலங்கும் வதனம் எங்கே?
சாந்தம் தவழும் சந்தனப் பொட்டு எங்கே?
புன்னகைச் சிரிப்பு எங்கே?
முறுக்கு மீசை எங்கே?
நிமிர்ந்த வீறு கொண்ட நடை எங்கே?
அன்புடன் வரவேற்கும் இன்முகம் எங்கே?
மோட்டார் சைக்கிளில் செல்லும் ஜோடி ஒன்று எங்கே?
நம் எல்லாக் காரியங்களிலும் முன் நிற்பவரே!
கதறி ஓலமிட எங்கே சென்றீர்கள்?
விதி வழிதான் எல்லாம் நடக்கும் என்பீர்களே!
மின்னாமல் முழங்காமல் எங்கே சென்றீர்கள்?
ஆறுதல் இன்றித் தவிக்கின்றோம் நீங்கள் எங்கே?

அன்புடன் பெறாமகள்
அ. சௌந்தரநாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் முருகேசபிள்ளை புலம்பல்

அன்பு அத்தானே எங்கே சென்றாய்?
ஆலமரமாய் எனக்கிருந்தாய்
அன்பு மொழி பல சொல்வாய்
பலநூறு புத்திமதி சொல்லி
பாரினிலே நல்ல வழிகாட்டியாய் நின்றீர்

எங்கள் குல விளக்காம் - அத்தானே
எனக்கு தந்தைக்கு தந்தையாக
தொழிலும் கற்றுத் தந்து திருமணமும்
செய்து வைத்து - இனிதே
குறையேதும் இல்லாது எம்மை இந்த
நிறைவாக வாழ்வதைப் பார்த்தே - தாமே
சொல்லாமல் கொள்ளாமல் போனதேனோ அத்தானே!
நாம் மீண்டும் எப்பிறப்பில்
மண்ணிலுன்னைக் காணப்போமோ???

அன்புடன் மைத்துனன்
முருகேசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர்கள் (பொது)

உடனிருந்தாய் துணை இருந்தாய்
ஒரு நொடியில் ஓடி விட்டாய்
நோயுற்ற வேளையிலே - நாம்
ஓடி வந்து பார்த்து வந்தோம்
ஒருவருக்கும் தெரியாமல்
ஓடி நீ - எங்கு சென்றாய்

## தேற்றம்

மானிட வாழ்வினிலே மடிவது தான் நியதி
நிலையில்லா வாழ்க்கையிலே நிலையானது இறப்பு
அந்நாளை அறியாமல் வாழுகின்றார் மக்கள்
எல்லாம் அறியாமை ஆண்டவன் தான் அருள் புரிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தளரங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பண்ணி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலங் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கண் மெய்யடி
யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளை வில்லதோரா
னந்த வெள்ளைப் பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமான் அருளியது

# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயி னவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வாய்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்க கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதல் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னை தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதே முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்வளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீரவிரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல் லோபதிவரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பளரும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்வென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பத்துக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குக் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லவையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரங்கள்
நானுனக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குத் தந்துவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் முக்கால உணர்வுண்டு
எச்சகக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி விளங்கிடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

கௌரிகாப்பு முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தில்லையில் அருளிச் செய்த

# திருப்பொற்சுண்ணம்

### ஆனந்த மனோலயம்

(மனம் ஆனந்தத்திலேயப்படுந் தன்மை)

முத்துநற்றாமம் பூமாலை தூக்கி
 முளைக்குடம் தூபம் நற்றீபம் வைமின்
சக்தியும் சோமியும் பார்மகளு
 நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
 கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
 ஆடப் பொற்சுண்ணை மிடித்து நாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிரார்க்கு
 பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுகின்ன ரண்ண கண்ணீர்
 வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
 குனிமின் றொழுமி னெங்கோ னெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
 செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. 2

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
 தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கு
 எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
 ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆளுமையாள் கொழுநற்
 கேய்ந்த பொற்சுண்ண மிடித்து நாமே. 3

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
 காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடன் அடியா வர்கள்
 நின்று நிலாவுக என்று வாழ்த்தி
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
 திருவேகம்பன் செம்பொற் கோவில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
 பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
 அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
 நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
 திருவே கம்பன் செம்பொற் கோயில்பாடி
பாசவினையைப் பறித்து நின்று
 பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாம்போ தாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்து நாமே 6

சூடுகந் தோளவளை ஆர்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மை ஆர்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்கு
காடக மாமலை யன்ன கோவுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிகளை ஆர்ப்ப வன் கொங்கை பொங்க
தோள்திரு முண்டகந் துதைந் திலங்க
சோத்தெம் பிரானென்றும் சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யின்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 8

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடி
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கை ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணை யோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் மிடித்து நாமே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினை பொற்கொடித் தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 12

மின்னிடைச் செந்துவா வாய்க் கருங்கண்
வெண்நகை பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான் மகட்கு
தன்னுடையக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடையப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 13

சங்க மரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடி
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாம்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ண மிடித்து நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப்பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்து
மூனக மான்மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாக நஞ்சுண்டல் பாடி
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 17

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின்ற நாடி நாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. 18

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென்தில்லை பாடி
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடி
கட்டிய மாகணைக் கச்சைப் பாடி
கங்கணம் பாடிக் கலித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே 19.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்கு
சோதியு மாயிரு ளாயி னார்க்கு
துன்பமு மாயின்ப மாயி னார்க்கு
பாதியு மாய முற்று மாயினார்க்கு
பந்தமு மாய் வீடுமாயி னார்க்குக்
ஆதியுட னந்தமு மாயி னாருக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

*நூல்*

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுஉடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சயலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக!
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்!
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளாறு திருப்பதிகம்

**பண் - பியந்தைக் காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி சயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்தம்மோடு
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவா டனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவா டனோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணை
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ ல்துன்னி
வளர்செம் பொனெங்கும் திகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள் வராணை நமதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கலா வல்லி மாலை

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று வடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத் (து)
அஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும் வெள்ளிக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்கு காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் படிநின் கடைக்கணல்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு பவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை தணுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஊருஞ் சதமல்ல வுற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றால் கச்சியேகம்பனே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடியாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகேயினிச் சாகும் பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண் கயிலாபுரிக் காளத்தியே.

இருப்பது பொய் போவது மெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே புகுந்ததொழி
நம்மரென்று நாமிருக்க நாய் நரிகள் பேய்க்கழுகு
தம்மரென்று தாமிருக்குந் தான்.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வருவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை ஒருவர் கடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவருமோ சலியாதி ரென்னேழை நெஞ்சே.


கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசித்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுந் தொழாப் பிழையும்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு மதுவழியே நாம் போமளவும்
எமக்கென் னென் றிட்டுண்டிரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகராசா + கமலாதேவி வம்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org